# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2018 - 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:..............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய்யெழுத்துகள்

அ) 2 வகை ☐ ஆ) 3 வகை ☐

இ) 12 வகை ☐ ஈ) 18 வகை ☐

2. தேவநேயப்பாவாணர் தமிழ் ஆய்விலே ஈடுபட்ட காலங்கள்

அ) 40 ஆண்டுகள் ☐ ஆ) 50 ஆண்டுகள் ☐

இ) 80 ஆண்டுகள் ☐ ஈ) 20 ஆண்டுகள் ☐

3. வயலைக் குறிக்கும் சொல்

அ) இல்லம் ☐ ஆ) பழனம் ☐

இ) விலங்கு ☐ ஈ) வானம் ☐

4. "பூவார்சோலை மயிலால" எனும் பாடலைப் பாடியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) முடியரசன் ☐

இ) கம்பர் ☐ ஈ) பாரதியார் ☐

5. ஈ என்ற எழுத்துக் குறிப்பது

அ) நுளம்பை ☐ ஆ) தும்பியை ☐

இ) வண்டை ☐ ஈ) இலையானை ☐

6. தேத்தண்ணி என்ற பேச்சு வழக்குச் சொல்லின் செவ்வழக்கு

அ) தேநீர் ☐ ஆ) தேனீர் ☐

இ) தேத்தண்ணி ☐ ஈ) தேத்தண்ணீர் ☐

7. மொழிக்கு இறுதியில் வரும் மெல்லின மெய்யெழுத்துகள்

அ) ங் ம் ன் ☐ ஆ) ண்,ம், ன் ☐

இ) ஞ் ம் ந் ☐ ஈ) ண் ன் ந் ☐

8. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச்சென்ற காலம்

அ) முதுவேனில் ☐ ஆ) கார் ☐

இ) இளவேனில் ☐ ஈ) குளிர் ☐

9. பூ + இதழ் =

அ) பூஇதழ் ☐ ஆ) பூயிதழ் ☐

இ) பூவிதழ் ☐ ஈ) பூவ்விதழ் ☐

10. காலத்தால் முந்திய ஊடகம்

அ) வானொலி ☐ ஆ) தொலைக்காட்சி ☐

இ) செய்தித்தாள் ☐ ஈ) இணையம் ☐

11. காரணம் தெரியாமல் வெறும் குறியீடாக வழங்கி வரும் பெயர்

அ) காரணப்பெயர் ☐ ஆ) தொழிற்பெயர் ☐

இ) காரணஇடுகுறிப்பெயர் ☐ ஈ) இடுகுறிப்பெயர் ☐

12. மூக்கு என்பது

அ) இடப்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐

இ) பொருட்பெயர் ☐ ஈ ) சினைப்பெயர் ☐

13. "பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து" என்னும் பாடல் இடம்பெற்ற நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) தொல்காப்பியம் ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) சீவகசிந்தாமணி ☐

14. "ஆராய்ந்து செய்" என்பதைக் குறிக்கும் பழமொழி.

அ) நிறைகுடம் தளம்பாது ☐

ஆ) கடுகுசிறிது காரம் பெரிது ☐

இ) ஆனைக்கும் அடிசறுக்கும் ☐

ஈ) ஆழமறியாது காலை விடாதே ☐

15. தென்னவன் என அழைக்கப்பட்டவன்

அ) பாண்டியன் ☐ ஆ) சேரன் ☐

இ) சோழன் ☐ ஈ ) பல்லவன் ☐

16. அவன் நீலன் என்பது

அ) வினையாலணையும் பெயர் ☐

ஆ) குறிப்பு வினைமுற்று ☐

இ) தெரிநிலை வினைமுற்று ☐

ஈ ) செய்வினை ☐

17. கேட்டல் பொறிமுறை ஊடகம்

அ) தொலைக்காட்சி ☐ ஆ) இணையம் ☐

இ) செய்தித்தாள் ☐ ஈ) வானொலி ☐

18. ஈழத்துத் தமிழறிஞர்

அ) ந.சி கந்தையா ☐ ஆ) பாரதியார் ☐

இ) கனக சுப்புரத்தினம் ☐ ஈ ) மறைமலையடிகள் ☐

19. மீன் வடிவிலான யாழ்

அ) பேரியாழ் ☐ ஆ) மகரயாழ் ☐

இ) வில்யாழ் ☐ ஈ) செங்கோட்டியாழ் ☐

20. ஓதை என்பதன் பொருள்

அ) அமைதி ☐ ஆ) ஆரவாரம் ☐

இ) இனிமை ☐ ஈ) வெம்மை ☐

21. உட்தலைப்பு அமைக்கும் இடங்களில் வருவது

அ) அரைப்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முக்காற்புள்ளி ☐ ஈ ) முற்றுப்புள்ளி ☐

22. இயற்கைத்தாய் பாவலனைக் கிடத்தித் தாலாட்டும் தொட்டில்

அ) மலர் ☐ ஆ) தென்றல் ☐

இ) கடல் ☐ ஈ ) அருவி ☐

23. ‘மொழிநூல் மூதறிஞர்’ என்னும் பட்டத்தைப் பெற்றவர்

அ) கால்டுவெல் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) வீரமாமுனிவர் ☐ ஈ ) விபுலாநந்தஅடிகள் ☐

24. மருத அரங்கில் ஆடலுக்கான முழவுகளாக முழங்குபவை

அ) மீன்கள் ☐ ஆ) குயில்கள் ☐

இ) முகில்கள் ☐ ஈ) வண்டுகள் ☐

25. ஒன்றுக்கு மேற்பட்ட பல சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது

அ) எழுத்து ☐ ஆ) சொல் ☐

இ) சொல்லியம் ☐ ஈ) சொற்றொடர் ☐

26. ‘‘கண்ணகி கதையை நானறிவேன்’’ எனக் கூறியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) கவுந்தி அடிகள் ☐

இ) வில்லவன் கோதை ☐ ஈ ) தண்டமிழ்ச் சாத்தன் ☐

27. அழகிய காட்சியைக் கண்டு மங்கை மகிழ்ந்தாள்.

இச்சொல்லியத்தில் அழகிய என்னும் சொல்

அ) எழுவாய் அடைமொழி ☐

ஆ) செயப்படுபொருள் அடைமொழி ☐

இ) செயப்படுபொருள் ☐

ஈ ) எழுவாய் ☐

28. தமிழ்மொழி தனித்தியங்கவல்ல செம்மொழி என்பதை எடுத்துக் காட்டியவர்

அ) பரிதிமாற் கலைஞர் ☐ ஆ) பாரதியார் ☐

இ) பாவேந்தர் ☐ ஈ ) தனிநாயகம் அடிகள் ☐

29. இமயவரம்பன் சேரலாதன் வடவரை வென்று இமயத்தில் ——— ப் பொறித்தான்.

அ) மீன்கொடியை ☐ ஆ) புலிக்கொடியை ☐

இ) விற்கொடியை ☐ ஈ ) வாட்கொடியை ☐

30. இமயத்தில் கல் எடுக்கச் செல்வதற்காக மரபுப்படி வாளுக்குச் சூட்டிய மாலை

அ) வஞ்சி மாலை ☐ ஆ) கரந்தை மாலை ☐

இ) உழிஞை மாலை ☐ இ) வெட்சி மாலை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுள் ஒன்றான யாழ்நூலக எரிப்பு என்பது தமிழர் மனங்களில் நெருப்பாகக் கனன்றுகொண்டிருக்கிறது. அழிக்கப்பட்ட தமிழ் நூல்கள், ஈழத்தமிழிலக்கியங்கள் என்பன ஈடு இணையற்றவை. அவற்றுள் பல எவராலும் மீளப்பெறமுடியாதவை. இந்த யாழ்நூலக எரிப்பின் பின் சிலர் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளின் கையெழுத்துப் படிகளைப் பொறுக்கி எடுத்து மீண்டும் அச்சுவடிவாக்கினர். அவற்றுள் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் நூல்களும் அடங்கும்.அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணத்துச் சிற்றூர் மக்களின் வாழ்வையே தனது பாடல்களில் பாடுபொருளாகக் கொண்டவர். சிற்றூர் வட்டார வழக்குச் சொற்களையும் இவர் பாடல்களில் கையாண்டார். யாப்பிலக்கணத்தோடு செய்யுள்கள் எழுதப்பட்ட காலத்தில் மகாகவியின் பாடல்கள் எளிய தமிழில் வாழ்க்கைச் சிக்கல்களையும் குமுக முரண்பாடுகளையும் பேசுபவையாக இருந்தன. இவர் வள்ளி, குறும்பா, கண்மணியாள் காதை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த ஈழத்துத் தமிழ் இலக்கியங்களில் மரபுப்பாக்களூடாகவும், புதுப்பாக்களூடாகவும் அதிகளவு மாறுதல்களை ஏற்படுத்தியவராக விளங்கிய இவர் ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சி வரலாற்றில் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார்.

1. மகாகவி எவ்வூர் மக்களின் வாழ்வைப் பாடுபொருளாகக்கொண்டு பாடல்கள் பாடினார்?

_______________________________________________

_______________________________________________

2. இவரது பாடல்கள் எவற்றைப் பேசுபவையாக இருந்தன?

3. மகாகவி எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

4. இன்றும் தமிழினத்தின் மனங்களில் நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் கொடுமை எது?

5. மகாகவி ஈழத்து இலக்கியங்களில் எவற்றினூடாக மாறுதல்களை ஏற்படுத்தினார்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தேவநேயப்பாவாணர் பிறந்த ஊர் எது? அவரது இயற்பெயர் என்ன ?

2. பிறமொழி ஊடகங்கள் எவ்வாறு தங்கள் நிகழ்வுகளை நடாத்துகின்றன?

3. ''நாங்கள் வாழ்நாளில் காணாத காட்சியொன்றைக் கண்டோம் எந்த நாட்டவளோ, யார்மகளோ, அறியோம்''.
இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

4. தேவநேயப்பாவாணரால் முறியடிக்கப்பட்ட ஐரோப்பிய மொழியறிஞரிடையே நிலவிய தவறான கருத்துகள் எவை?

5. செய்தித்தாளின் சிறப்பியல்புகள் எவை?

6. பன்னாட்டுத் தாய்மொழிகள் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது? இவ்வறிக்கையை வெளியிட்ட நிறுவகம் எது?

7. எதனை இலக்கியங்கள் 'நெற்றிக்கண்' என்று பேசுகின்றன?

புள்ளிகள் 10

**4) எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

பண்டைத் தமிழருக்குப் பெருமையும் உண்டு
பாரினில் அவர்களுக்குப் பண்பும் உண்டு

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் சொல்லியங்களின் ஆகுபெயர்களை இனங்கண்டு எழுதுக.

அ. உலகம் பழிக்கும் செயலைச் செய்யாதே. ______

ஆ. உழவர் நெல் அறுவடை செய்தனர். ______

இ. முந்திரிகை இனித்தது. ______

2. அ. மூவகை மொழிகளையும் தருக.

ஆ. அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

3. எடுத்துக்காட்டுகள் தருக.

தன்மை வினைமுற்று ______________________

காரண இடுகுறிப்பெயர் ______________________

பிறவினை ______________________

தெரிநிலை வினைமுற்று ______________________

எதிர்மறை வினை ______________________

வினையெச்சம் ______________________

4. சொற்பொருள் தருக.

களத்துமேடு ______________ படிமம் ______________

துயில் ______________ ஞாலம் ______________

அரையம் ______________ கவின் ______________

5. அ. கருத்தை அடிப்படையாகக்கொண்டு சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்?

______________________________________________

ஆ. அவற்றினைத் தருக.

______________________________________________

இ· கூற்றுச் சொல்லியத்திற்கு ஓர் எடுத்துக் காட்டுத் தருக.

______________________________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாம் அறிவியல் தொழில் நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றோம். உடனுக்குடன் செய்திகளை அறியவும் பிறருக்கு அனுப்பவும் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கணினி, இணையத்தளம் போன்றவற்றைக் கூறலாம். நாம் ஊடகங்களில் நல்லவற்றை வாசித்தும் கேட்டும் பார்த்தும் பயன் பெறவேண்டும். இவ்வாறு நன்மை தரக்கூடிய ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவது பிழையானது.

____________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ ஊடகங்களில் தமிழ்

- ✸ மாவீரர் நாள்

- ✸ நோயற்ற வாழ்வும் நாமும்
  - *எம்மை அதிகமாகத் தாக்கும் நோய்கள்*
  - *அவை உருவாகும் காரணங்கள்*
  - *நோய்களினால் ஏற்படும் தீமைகள்*
  - *அவற்றைத் தடுக்கும்வழிகள்*

புள்ளிகள் 20